

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011- 2012)

(பதினான்காவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

-12-1-2012 ஆம் நாளன்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 2-.MAY 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

12–1–2012 ஆம் நாளன்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	v
	இணைப்பு-I	1-17
	இணைப்பு-II	19-47
	இணைப்பு-III	49-54




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

முன்னுரை

2011-2012-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14-07-2011-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் மதுரை மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 12-1-2012-ஆம் நாளன்று அம்மாவட்டத்தில் குழுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 147 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 77 மனுக்கள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றின் மீது அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 62 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் நாளன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள பல்நோக்குக் கூட்ட அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. உ. சகாயம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மதுரை மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் நேர் நின்று விளக்கமளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 62 மனுக்களை குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 21 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 36 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசு துறைகளின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 5 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாக கருதப்பட்டன.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

19-4-2012-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை-600 009.
19-4-2012,
சித்திரை திங்கள் 7 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு-2043.

ப. மோகன்,
தலைவர்.
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	4070	திரு. மு. அய்யல்சாமி, தலைவர், காண்டை ஊராட்சி, திருமங்கலம் ஊராட்சி, மதுரை.	காண்டைக்கு கூடுதல் பேருந்து வசதி வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தற்போது காண்டைக்கு 20 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. புதிய பேருந்து சேர்க்கையின் போது கூடுதல் நடைகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், (மதுரை) அவர்களின் கடித எண் வது/அ4/1566/2011, நாள்: 31–12–2011.]	காண்டைக்குக் கூடுதல் பேருந்து இயக்குவதுடன் காலை 9 மணி முதல் 12 மணி வரை பேருந்து விட நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிட்., அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	4072	திரு. எஸ். சங்கர்பாண்டியன் மற்றும் இரு நபர்கள், காடுபட்டி, முள்ளிப்பள்ளம் (வழி), வாடிப்பட்டி.	தென்கரை கால்வாயில் சிறுபாலம் அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுதாரர் கோரியுள்ள இடத்தில் ஏற்கனவே பாலம் ஒன்று கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இருப்பினும் புதிய பாலம் கட்டுவதற்கு ரூ. 10,00,000/– தேவைப்படுகிறது. இந்தக் கால்வாய் பொதுப் பணித்துறைக்கு சொந்தமாக உள்ளதால் ஊரக வளர்ச்சித் துறை மூலம் பாலம் கட்ட இயலாது. [வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) வாடிப்பட்டி அவர்களின் கடித எண் 20/2012/அ4, நாள்: 3–1–2012.]	தென்கரை கால்வாயில் சிறுபாலம் அமைப்பதற்கு பொதுப்பணித்துறையில் தடையில்லா சான்று பெற்று இப்பணியினை அவசியம் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), வாடிப்பட்டி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	4075	திரு. கோ. திருச்செல்வம், ஏ.பி. மலையாண்டிபுரம், யா. கொடிக்குளம், விவசாயக்கல்லூரி (வழி) மதுரை வடக்கு.	மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அரும்பனூர் ஊராட்சி ஏ.பி. மலையாண்டிபுரம் கிராமத்தில் ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மேல்நிலைத் தொட்டி அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அரும்பனூர் ஊராட்சி, ஏ.பி. மலையாண்டிபுரம் கிராமத்தில் ஆழ்குழாய் கிணறுடன் கூடிய மேல்நிலைத் தொட்டி அமைத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ) மதுரை கிழக்கு அவர்களின் கடித எண் 3478/2011/அ5, நாள்: 2–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கிராமத்தில் தற்காலிக தீர்வாக இரண்டு சிறிய தண்ணீர் தொட்டி வைத்து டாங்கர் லாரி மூலம் தண்ணீர் நிரப்பி குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு செய்யவும், வருகின்ற நிதியாண்டில் இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறும் நிர்வாகப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
4	4077	திரு. கோ. திருச்செல்வம், ஏ.பி. மலையாண்டிபுரம், யா. கொடிக்குளம் (அஞ்சல்), விவசாயக்கல்லூரி (வழி) மதுரை வடக்கு, மதுரை–625 017.	மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அரும்பனூர் ஊராட்சியை சார்ந்த அ. புதூர் கிராமத்தில் துணை சுகாதார வளாகத்தில் அலுவலர்கள் இல்லாமை.

துறையின் பதிலுரை

(5)

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அரும்பனூர் ஊராட்சியை சார்ந்த அரும்பனூர் கிராமத்தில் சுகாதார நிலையம் தடுப்பூசி போடும் அளவிற்கும் முதலுதவி அளிக்கும் வகையில் சிறிய கட்டிடம் கொண்டதாகும். இதில் கிராம சுகாதார செவிலியர்கள் தங்குவதற்கு மின்வசதி, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் கிடையாது. எனவே, கிராம சுகாதார செவிலியரால் அக்கிராமத்தில் தடுப்பூசி போடுதல், மகப்பேறு உதவிகள் போன்ற சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

[துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், மதுரை அவர்களின் கடித எண் 56/ அ7/2012, நாள்: 2–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அரும்பனூர் ஊராட்சியை சார்ந்த அ. புதூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையத்தை பகல் நேரங்களில் திறந்து வைப்போடு, வாரத்திற்கு மூன்று நாட்கள் கிராம சுகாதார செவிலியர் வந்து பணியாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், மதுரை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	4082	பி. ராமசாமி, ஊராட்சி மன்றத் தலைவர், சின்னாரெட்டிபட்டி, டி. கல்லுப்பட்டி, பேரையூர்.	பி. முத்துலிங்காபுரம்–பேரையூர் சாலை மூலக்கரை விலக்கிலிருந்து கண்மாய் வழியாக சின்னாரெட்டிபட்டி வரை தார்சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள சாலை பி. முத்துலிங்காபுரம்–பேரையூர் சாலை மூலக்கரை விலக்கிலிருந்து கண்மாய் வழியாக சின்னாரெட்டிபட்டி வரை செல்லும் இணைப்புச் சாலையாகும். இச்சாலை கண்மாய் கரையில் சாலை அமைக்க வேண்டி இருப்பதால், ஏற்கனவே உள்ள கரையை அகலப்படுத்த வேண்டியுள்ளது. கண்மாய்க்கரை மண் சரியாமல் இருக்க (Tie wall) அமைக்கப்பட வேண்டும். GSB மற்றும் இரண்டு Layer WBM BT அமைக்கப்பட வேண்டும். எனவே, தோராய மதிப்பீடு மொத்தம் ரூ. 35 லட்சம் தேவைப்படும். இப்பணியினை பிரதம மந்திரி கிராம இணைப்புச்சாலை திட்டத்தில் அமைப்பதற்கு கருத்துரு ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணை பெறப்பட்டவுடன் பணிகள் துவக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) (பொ.) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம், அவர்களின் கடித எண் 1833/2011/இ3, நாள்: 5–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

பி. முத்துலிங்காபுரம்–பேரையூர் சாலை மூலக்கரை விலக்கிலிருந்து கண்மாய் வழியாக சின்னாரெட்டிபட்டி வரை தார்சாலை அமைக்கும் பணியை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) (பொ.) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	4083	திரு. பி. ராமசாமி, ஊராட்சி மன்றத் தலைவர், சின்னாரெட்டிபட்டி, டி. கல்லுப்பட்டி, பேரையூர்.	சின்னாரெட்டிப்பட்டி முதல் மேட்டுப்பட்டி வரை சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள சாலை, சின்னாரெட்டிபட்டி கிராமத்திலுள்ள சேடப்பட்டி ஒன்றியம், மேட்டுப்பட்டி கிராமம் வரை செல்லும் இணைப்புச்சாலையாகும். இச்சாலையில் நான்கு Pipe Culvert-ம் நான்கு சிறுபாலங்களுக்கும் (Mini Culvert), ஒரு பெரிய பாலமும் (Bridge with Retaining wall) அமைத்து மேலும் 4.60 கி.மீ. நீளத்தில் வண்டிப்பாதையை தார்ச்சாலையாக மாற்ற வேண்டும். ஆனால் இந்த தார்ச்சாலையினை அமைப்பதற்கு ரூ. 2.00 கோடி மதிப்பீடு செலவு தேவைப்படும் என்பதால் இப்பணியினை பிரதம மந்திரி கிராம இணைப்புச்சாலை திட்டத்தில் அமைப்பதற்கு கருத்துரு ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணை பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ) (பொ.) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம், அவர்களின் கடித எண் 1833/2011/அ3, நாள்: 5-1-2012.]

குழுவின் பரிந்துரை

(6)

சின்னாரெட்டிப்பட்டி முதல் மேட்டுப்பட்டி வரை சாலை அமைக்கும் பணியை பிரதம மந்திரி கிராம இணைப்புச்சாலை திட்டத்தில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ) (பொ.) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	4084	மா. ஜெயக்கொடி, பாஸ்கரபாண்டி காம்பவுண்டு, 18, மகாதேவன் தெரு, ஆசிரியர் காலனி, அனுப்பானடி, மதுரை.	மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய சந்தையூரிலிருந்து சாப்டூர் செல்லும் சாலையை சீரமைக்குமாறு கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
சந்தையூர் சாப்டூர் சாலை மொத்தம் 6.20 கி.மீ. நீளம் கொண்டது. இதில் 3.0 கி.மீ. தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலும் மீதி 3.20 கி.மீ. சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. மேலும் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 3.20 கி.மீ. நீளத்தில் 2 கி.மீ. தூர சாலையை நபார்டு 2011–2012 திட்டத்தின்கீழ் 27.50 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள 1.2 கி.மீ. தூரம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக உள்ளதால் அந்த பகுதியில் இன்று வரை சாலை அமைக்கப்படாமல் உள்ளது. அதே போன்று தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 3.00 கி.மீ. நீளச் சாலையில் 2.80 கி.மீ. சாலையை நபார்டு 2011–2012 திட்டத்தின்கீழ் 40.00 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதி இன்று வரை வரப்பெறவில்லை. மேலும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ள 1.20 கி.மீ. தூரத்தில் சாலை அமைக்க அரசு அனுமதி வழங்கப்பட்ட பின்னர் இதற்காக மதிப்பீடு சமர்ப்பிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) (பொ.) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம், அவர்களின் கடித எண் 1833/2011/அ3, நாள்: 5–1–2012.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையை சீரமைக்கவும் இச்சாலையின் தொடர்ச்சியில் வனச்சரகத்தை சார்ந்த 1.20 கி.மீ. தூரத்திற்கு பயன்படுத்த மாவட்ட வன அலுவலர், திருவில்லிபுத்தூர் அவர்களிடம் அனுமதி பெற்று இப்பணியை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)(பொ) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	4090	பொதுமக்கள், 9வது வார்டு, கவுண்டர் தெரு, பொட்டுலுப்பட்டி, போடிநாய்க்கன்பட்டி ரோடு, டி. வாடிப்பட்டி, வாடிப்பட்டி தாலுக்கா.	மனுதாரர் குடியிருக்கும் பகுதியில் குடிநீர் குழாய் அமைத்தல், நடைபாதை சீராக்குதல், தடுப்புச்சுவர் அமைத்தல் மற்றும் ஆதான் ஒடையில் கடப்பதற்கு பாலம் அமைத்தல் மற்றும் மின்விளக்கு அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
வாடிப்பட்டி பேரூராட்சியின் 9வது வார்டில் மொத்தம் மக்கள் தொகை சுமார் 902 ஆகும். மேற்படி வார்டில் 3 தெருக்கள் அடங்கும். இதில் பொதுக்குழாய் 28ம், மினிபவர்பம்பு இரண்டும், ஆழ்குழாய் 2ம் உள்ளது. மனுதாரரின் கோரிக்கையின்படி ஒரு எண்ணம் பொது குழாய் பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து அமைத்திட மன்றத் தீர்மானம் பெற்று 31–03–2012க்குள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மனுவில் குறிப்பிட்டுள்ள ஆதான் ஒடை பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது. மேற்படி ஒடை கரையின் ஒருபுறம் ஏற்கனவே தார்ச்சாலை உள்ளது. மறுபுறம் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான கரையை தற்காலிக பாதையாக பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது ஒடையின் இருபுறமும் தடுப்புச் சுவர் பொதுப்பணித்துறையின் மூலம் தான் செயல்படுத்த வேண்டும். [செயல் அலுவலர் வாடிப்பட்டி பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண் 181/2011/அ1/ நாள்: 30–12–2011.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு செயல் அலுவலர், வாடிப்பட்டி பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	4091	திருப்பாலை அன்புநகர் குடியிருப்போர் நலச்சங்கம், 1/289, அன்புநகர், திருப்பாலை, மதுரை.	மதுரை திருப்பாலை அன்புநகர் பகுதியில் குறைந்த மின்அழுத்தம் சரிசெய்ய புதிய மின்மாற்றி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
புதிய மின்மாற்றி அமைக்க ஏற்பட்டுள்ள ஆட்சேபணையை நீக்கி உரிய மாற்று இடத்தை தேர்வு செய்து, எவ்வித ஆட்சேபணையும் இல்லாது அமைத்துக் கொடுக்கும் பட்சத்தில் உடனடியாக மின்மாற்றி நிறுவப்படும் என்பதனை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. [மேற்பார்வை பொறியாளர், மமிபவ, மதுரை அவர்களின் கடித எண் உமிபொ/ஊர/திருப்பாலை/கோ.பு.ம/அ.எண்.296, நாள்: 31–12–2011.]	மதுரை திருப்பாலை அன்புநகர் பகுதியில் குறைந்த மின்அழுத்தம் சரிசெய்ய புதிய மின்மாற்றி அமைப்பதற்கு ஆட்சேபணைகள் இல்லாத இடத்தை கூடுதல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் உதவியோடு ஆராய்ந்து பணியை முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்பார்வை பொறியாளர் மத்திய மின் பகிர்மான வட்டம், மதுரை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
10	4095	ஜே.எஸ். சரவணன், முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர், கீழக்குயில்குடி ஊராட்சி, 4/46, சீனிவாசா காலனி, தட்டானூர், தனக்கன்குளம், மதுரை.	ஸ்ரீனிவாச காலனி–மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் (வழி–முனிச்சாலை, தெப்பக்குளம், அண்ணாநகர்) வரை அரசு நகர் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
புதிய பேருந்து சேர்க்கையின் போது முன்னுரிமை அளித்து மேற்படி வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை அவர்களின் கடித எண் வது/அ4/1569/2011, நாள்: 31–12–2011.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு இயக்கப்படும் பேருந்தினை மேலும் காலை 8 மற்றும் 10 மணிக்கும், மாலை 5 மணி மற்றும் இரவு 10 மணிக்கும் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிட்., அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	4097	திரு. கே. பாண்டி, அனைத்து சமூக பொதுமக்கள், தொட்டப்பநாயக்கனூர் கிராம பொதுமக்கள்.	தொட்டப்பநாயக்கனூர்–மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் நகரப் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
அரசு விதிமுறைகளின்படி 35 கி.மீ. வரையே நகரப் பேருந்து வசதி செய்து கொடுக்க இயலும். மேற்படி கிராமம் 50 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக இருப்பதால் நகரப் பேருந்து வசதி செய்து கொடுக்க இயலாது. [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை அவர்களின் கடித எண் வது/அ4/1571/2011, நாள்: 31–12–2011.]	தொட்டப்பநாயக்கனூர்–மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்துக்கு பதிலாக ரூட் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிட்., அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	4100	எஸ். லெட்சுமி, ஆதிதிராவிடர், பொதுமக்கள் மற்றும் பெண்கள்.	தொட்டப்பநாயக்கனூர் கிராம ஆதிதிராவிடர் பெண்களுக்கு தனிக் கழிப்பறை கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சியில் ஏற்கெனவே மகளிர் சுகாதார வளாகம் ஒன்று உள்ளது. தற்போது அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி ஒருக்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் பராமரிப்பு திட்டத்தின்கீழ் மராமத்து பணிகள் செய்யப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய சுகாதார வளாகம் கட்டும் திட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் இம்மனு தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்ற விபரம் தெரியப்படுத்தப்படுகிறது.

[வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ) உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடித எண் 1060/2011/தி1, நாள்: 3–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் பெண்களுக்கு ஒரு புதிய சுகாதார வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ) உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	4104	ரெ. யோகேஸ்வரன், தலைவர், நேயா நற்பணிமன்றம், நடுத்தெரு, அனுப்பானடி, மதுரை.	அனுப்பானடியில் அமைந்துள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் நூலகம் அமைக்க கோருதல்.

TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை

(5)

மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் அனுப்பானடி கிளைநூலகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அனுப்பானடி உட்பகுதியில் பகுதி நேர நூலகம் அமைக்க வேண்டுமென்றால் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது:-

1. வாடகை இல்லாத இலவசக் கட்டிடம்.
2. மாவட்ட நூலக ஆணைக்குழுவின் பெயருக்கு 5 சென்ட் காலிமனை பத்திரபதிவு செய்து தரப்படவேண்டும்.
3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
4. ரூ.1,000/– செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.
5. ரூ.5,000/– மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக வழங்க வேண்டும்.

[மாவட்ட நூலக அலுவலர், (பொ) மதுரை அவர்களின் கடித எண் 560/அ/2011, நாள்: 3–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

அனுப்பானடியில் அமைந்துள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் மனுதாரர் ஐந்து நிபந்தனைகளையும் நிறைவேற்றும் பட்சத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட நூலக அலுவலர் (பொ), மதுரை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
14	4107	திரு. பி.எஸ். குபேந்திரன், 4/15, சீனிவாசாகாலனி தெற்கு, தட்டானூர், மதுரை–6.	நியாய விலைக் கட்டிடம் கட்டித்தரக் கோருதல்

துறையின் பதிலுரை

(5)

தற்போது கீழக்குயில்குடி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இன்மையால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின்கீழ்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் அல்லது ஊராட்சி ஒன்றிய பொது நிதியின்கீழ் வரப்பெற்றால் மேற்கண்ட கோரிக்கைகளள நிறைவேற்றிட முடியும் என சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், திருப்பரங்குன்றம் அவர்களின் கடித எண் 31/2012/தி1, நாள்: 4–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

பிரதி வாரம் திங்கட்கிழமை தோறும் தட்டானூர் பகுதிக்கு சென்று பொருட்களை வழங்க இணைப் பதிவாளர், கூட்டுறவுத்துறை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
15	4111	ஆர். விஜய கண்ணன், த/பெ. ரோசாப்பு தேவர், வடக்குத்தெரு, தோப்பூர்.	தோப்பூர் ஊராட்சியில் அமைந்துள்ள அனைத்து வார்டுகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்ற ஊராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் உரிய மதிப்பீட்டினை தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நிதி உதவி பெற்று உரிய நடவடிக்கை தொடர்வதாக ஊராட்சி மன்றத் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண். 031/2012/தி1. நாள் 4–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

தோப்பூர் ஊராட்சியில் அமைந்துள்ள அனைத்து வார்டுகளுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தன் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்க வேண்டிய பணியை வருகின்ற நிதியாண்டில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	4114	ச. முத்து குமரேசன், அம்பிகை பவனம், 10, பொராக்கா நகர் 2வது தெரு, பசுமலை, மதுரை.	மதுரை, பசுமலை, பெராக்கா நகர் விரிவாக்கப் பகுதிக்கு மாநகராட்சியிலிருந்து குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பசுமலை, பெராக்கா நகர் தற்போது மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதியாகும். இந்த பகுதிக்கு புதிதாக குடிநீர், பாதாள சாக்கடை அமைப்பதற்கு திட்டம் தயாரித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒப்புதல் பெற்ற பின்பு பணிகள் நடைபெறும். மேற்படி பணி மேற்கொள்ளப்படும் வரை மதுரை மாநகராட்சி மூலம் லாரிகள் மொண்டு குடிநீர் சப்ளை செய்யப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.

[நகரப்பொறியாளர் மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண். ம.பொ.4/ 000252/2011, நாள் 4–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மதுரை, பசுமலை, பெராக்கா நகர் விரிவாக்கப் பகுதிக்கு மாநகராட்சியிலிருந்து குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வசதியினை நிரந்தரமாக செய்து கொடுக்கவும், அது வரை தற்காலிக ஏற்பாடாக சின்டெக்ஸ் தொட்டி வைத்து தினமும் லாரிகள் மூலம் சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் நகரப்பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	4115	ஆதிதிராவிடர் பொதுமக்கள், இந்திராநகர், உத்தப்பநாயக்கனூர், உசிலம்பட்டி.	உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி இந்திராநகரில் சிமெண்ட் சாலை அமைத்து தர கோருதல்.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	4215	திரு. ஐ. அபுதாகிர், த/பெ. எம். இப்ராகீம்கனி, 18ஏ/57, கீழப்பள்ளிவாசல் தெரு, திருமங்கலம்.	கீழப்பள்ளிவாசல் தெருவில் குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்து புதிய மின்மாற்றி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் கோரிக்கையின்படி, திருமங்கலம் கீழப்பள்ளிவாசல் தெரு, மீனாட்சி தியேட்டர் மின்மாற்றி 500 கி.வோ. மின்மாற்றியில் இருந்து தற்பொழுது மின்வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மின்னழுத்தம் சரியான அளவிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது. திருமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கூடுதலாக மின்மாற்றி அமைக்க மத்திய அரசின் R-APDRP திட்டத்தின்கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது. அவற்றில் மூன்று எண்ணம் கீழப்பள்ளிவாசல் தெருவிற்கு மட்டும் நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே கூடிய விரைவில் கீழப்பள்ளிவாசல் தெருவில் புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[மேற்பார்வை பொறியாளர், மமிபவ, மதுரை–7 அவர்களின் கடித எண். உமிபொ/நகர்/திருமங்கலம்/வ.ஆ./கோ./அ/எண். 2011, நாள் 3–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணியை விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்பார்வை பொறியாளர், மத்திய மின் பகிர்மான வட்டம் கே.புதூர் மதுரை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(5)

உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி இந்திரா நகரில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் உள்ள புதிய குடியிருப்பு பகுதியில் வரும் நிதியாண்டில் ஊராட்சி நிதியின் மூலம் சிமெண்ட் சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண் மற்றும் நாள் இல்லை.]

குழுவின் பரிந்துரை

(6)

உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி இந்திரா நகரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை பிப்ரவரி 2012–க்குள் முடித்துவிட்டு குழுவிற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிக்கை அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், அவர்களுக்கு பரிந்துரை செய்வதோடு, உதவி இயக்குநர், பேரூராட்சிகள் அவர்களும் இப்பணியை திட்டமிட்டபடி செய்து முடிக்கப்பட்டனவா என கண்காணிக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	4219	திரு. கோ. சரவணக்குமார், 5பி, சொக்கலிங்கநகர் 1வது தெரு, 1வது குறுக்குத் தெரு, கூடல் நகர், மதுரை.	சொக்கலிங்க நகர் 1வது தெருவில் கழிவு நீர் வடிகால் சாலை அமைக்க வலியுறுத்தல்.

துறையின் பதிலுரை

(5)

மேற்படி சொக்கலிங்க நகர் 1வது தெரு, தற்போது மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதியாகும்.

மேற்படி பகுதிக்கு புதிதாக பாதாள சாக்கடை அமைக்கும்பணி மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது. மேற்படி விரிவாக்கப் பகுதியில் முதற்கட்டமாக கிராவல் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் வடிகால் மற்றும் குடிநீர் வசதி செய்யும் பணி நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

[நகரப்பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண் ம.பொ.4/ 000252/2011, நாள் 4–1–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியினை மாநகராட்சி அதிகாரிகளும், பொதுப்பணித்துறை அதிகாரிகளும், நேரடியாக இவ்விடத்தைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	4222	திரு. பி. கலையரசு, கிராம நல கமிட்டி உறுப்பினர், குறவன்குளம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி.	அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட குறவன்குளத்தில் குடிநீர் விநியோகிக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குறவன்குளம் கிராமத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2200 ஆகும். ஒரு நபருக்கு 70 எல்பிசிடி அளவு குடிநீர் வழங்கப்பட வேண்டும். தற்போது மேற்படி பகுதியில் மேல்நிலை தொட்டி ஒன்று (60,000 லிட்டர்) கொள்ளளவில் அமைக்கப்பட்டு இதன் மூலம் தினசரி 2 முறை 1.20 இலட்சம் லிட்டர் குடிநீர் கிணறு அமைத்து மேற்படி மேல்நிலைத் தொட்டியை மாதமிருமுறை பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. அலங்காநல்லூர் பேரூராட்சியில் கூடுதல் குடிநீர் விநியோகம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு ரூ. 613 இலட்சத்தில் உரிய கருத்துரு அனுப்பப்பட்டு, மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கான பணி தற்போது நடவடிக்கையில் உள்ளது. இப்பணி முழுமையாக முடிவடையும் நிலையில் அலங்காநல்லூர் பகுதி முழுமைக்கும் (குறவன்குளம் உட்பட) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

[செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 84/2011, நாள் 30–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட குறவன் குளத்தில் குடிநீர், சாதாரண நீர் என இரண்டு தண்ணீரையும் இடைவெளிவிட்டு அதாவது நல்ல தண்ணீர் ஒரு நேரம் எனவும், சாதா தண்ணீர் ஒரு நேரம் எனவும் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	4223	திரு. பி. கலையரசு, கிராம நல கமிட்டி உறுப்பினர், குறவன் குளம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி.	அலங்காநல்லூர், பேரூராட்சிக்குட்பட்ட குறவன்குளத்தில் நீர்பிடிப்பு பகுதிகளான கண்மாய் ஊரணிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குறவன்குளம் பகுதியில் சிலோன் காலனி ஊரணி மற்றும் விநாயகர் ஊரணியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டி நோட்டிஸ் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான கண்மாய், சின்ன கண்மாய், செருவன் கண்மாய்கள் பொதுப்பணித்துறை மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மற்ற ஊரணிகளுக்கு ஆக்கிரமிப்புகள் கண்டறிய சர்வேக்கு வருவாய் துறைக்கு சலான் மூலம் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்படும்.

[செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 84/2011, நாள் 30–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை சர்வே செய்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி மதுரை மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரம்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	455	திரு. வே. பாலமுருகன், 16/1, கிழக்கு பாரதியார் தெரு, பிளாட் எண். RRD 50, திருநகர், மதுரை–6.	திருப்பரங்குன்றத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருப்பரங்குன்றத்தில் தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த விவரங்கள் தீயணைப்பு மற்றும் மீட்புபணித்துறை இயக்குநர் அவர்களுக்கு ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [கோட்ட அலுவலர், தீயணைப்பு–மீட்பு பணிகள் துறை, மதுரை கோட்டம், மதுரை அவர்களின் கடித எண் 9465/ந/2011, நாள் 16–9–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	456	திரு. இ. சின்னு, தலைவர், காண்டை ஊராட்சி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்.	திருமங்கலம் வழியாக காண்டைக்கு கூடுதல் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தற்போது காண்டைக்கு 20 தனிநடைகள் இயக்கப்பட்டு வருகிறது. புதிய பேருந்து சேர்க்கையின் போது கூடுதல் நடைகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) அவர்களின் கடித எண். வது/அ4/1564/2011, நாள் 31–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கூடுதல் பேருந்து இயக்குவதற்கு விரைவில் முயற்சி எடுக்கப்படும் என பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை அவர்கள் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	457	திரு. இ. சின்னு, தலைவர், காண்டை ஊராட்சி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்.	காண்டை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் புதிய பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதிய பேருந்து சேர்க்கையின் போது முன்னுரிமை அளித்து மேற்படி வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், (மதுரை) அவர்களின் கடித எண். வது/அ4/1565/2011, நாள் 31–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புதிய பேருந்து இயக்குவதற்கு முயற்சி எடுப்பதாக பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை அவர்கள் தெரிவித்துள்ளதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	1999	திரு. ச. பெரியசுருப்பன், முன்னாள் படைவீரர், த/பெ. சங்கையா, டி. கோவில்பட்டி, மேலூர்.	பெரியார் பேருந்து நிலையம் – டி. கோவில்பட்டி தனி நகரப் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதிய பேருந்து சேர்க்கையின் போது முன்னுரிமை அளித்து மேற்படி வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) அவர்களின் கடித எண். வது/அ4/1567/2011 நாள் 31–12–2011.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள நகர பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிட்., அவர்கள் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2001	திரு. பெ. கோபாலன், செயலாளர், முன்னாள் இராணுவத்தினர் நகர் குடியிருப்போர் நலச்சங்கம், 69, முன்னாள் இராணுவத்தினர் நகர், கருப்பாயூரணி, மதுரை.	மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், திண்டியூர் ஊராட்சி (ஒடைப்பட்டி) முன்னாள் இராணுவத்தினர் குடியிருப்பில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1. புதிய நீராதாரம் அமைக்க ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லாததால், நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை வழங்கி குடிநீர் வசதிகள் செய்து தரப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
2. ஏற்கெனவே திண்டியூர் ஊராட்சி ஒடைப்பட்டியில் 6 மின் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் நிதிவசதி கிடைக்கப்பெற்றவுடன் மீதமுள்ள 4 மின்குழல் விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
3. ஈச்சனோரி வாய்க்கால் சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர், தூர்வாருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
4. மனுவில் கேட்டுள்ளபடி, குடியிருப்பு பகுதியின் நடுவில் செல்லும் வாய்க்காலில் 2 பாலங்கள் கட்டித்தர நடப்பு நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	

[வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ.) மதுரை கிழக்கு அவர்களின் கடித எண். 3478/2011/அ5 நாள் 2–1–2012.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	4062	முனைவர் தி. ராஜ்பிரவீன், 218, வ.உ.சி. நகர் முதல் தெரு, பி.பி. சாவடி, மதுரை.	பி.பி. சாவடி – வ.உ.சி. நகர் பகுதியில் பேருந்து நிறுத்தம் அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வார்டு எண். 21, பி.பி. சாவடி வ.உ.சி நகர் பகுதியை ஒட்டி பஸ் ஸ்டாப் அமைப்பதற்கு போக்குவரத்து துறை மற்றும் காவல்துறை (போக்குவரத்து) மற்றும் நெடுஞ்சாலைத் துறையிடம் உரிய அனுமதி பெற்று புதிதாக மதிப்பீடு தயார் செய்து, உரிய ஒப்புதல் பெறப்பட்ட பின்பு புதிதாக பேருந்து நிறுத்தம் அமைக்கப்படும். [நகரப் பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண். ம.பொ.4/ 000252/11 4–1–2012.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் பயணியர் நிழற்குடை இரண்டு மாத காலத்திற்குள் நிறுவப்படும் என நகரப் பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்கள் தெரிவித்துள்ளதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	4065	திருமதி. மு. ராமலட்சுமி, ஊராட்சி மன்றத் தலைவர், குமாரபுரம் ஊராட்சி மன்றம், பேரையூர் தாலுகா.	குமாரபுரம் பஞ்சாயத்தில் இருந்து பாப்பையாபுரம் செல்லும் சாலையில் பாலம் கட்ட கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குமாரபுரம் முதல் பாப்பையாபுரம் வரை செல்லும் சாலை PMGSY 2006–2007 திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டது. இந்த சாலையில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பாலங்களும் நன்றாக உள்ளது. பாலத்தின் இரண்டு புறமும் உள்ள அணுகு சாலை 3.00 மீட்டருக்கு மட்டும் குண்டும் குழியுமாக உள்ளது. இச்சாலை மற்றும் பாலம் மராமத்து பணிகள் ஒன்றிய பொதுநிதியிலிருந்து உடனடியாக எடுத்துச் செய்யப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) (பொ) ஊராட்சி ஒன்றியம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 1833/2011/அ3. நாள் 5–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	4071	திரு. ஆர். கர்ணன், ஆதிதிராவிடர் கிராம மக்கள், முண்டுவேலம்பட்டி, கோவிலாங்குளம், உசிலம்பட்டி.	செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கோவிலாங்குளம் ஊராட்சியில் முண்டு வேலம்பட்டி கிராமத்தில் தெற்கு ஆதிதிராவிடர் காலனிக்கு அடிப்படை வசதிகள் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

இக்காலனியில் 15 வீடுகள் கொண்ட 25 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஒன்று உள்ளது. கைபம்பு ஒன்று உள்ளது. தெருவிளக்கு 2 உள்ளன. இவைகள் அனைத்தும் பயன்பாட்டில் உள்ளன. 2011–12 ஆம் ஆண்டிற்கு கோவிலாங்குளம் ஊராட்சி தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதன்மை கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, குக்கிராமங்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் முண்டுவேலம்பட்டி ஆதி திராவிடர் காலனியில் மயானக் கொட்டகை, சுற்றுச்சுவர், சிமெண்ட் சாலை மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். 2011–12ஆம் ஆண்டிற்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் முண்டுவேலம்பட்டி ஆதி திராவிடர் காலனிக்கு 2 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது என ஊராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார். ஊராட்சி மன்றத் தலைவர் கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், செல்லம்பட்டி அவர்களின் கடித எண். 16/2012/தி1 நாள் 4–1–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதிகளுக்கான பணிகள் அனைத்தும் இந்த ஆண்டில் செய்து தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்கள் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	4073	திரு. எஸ். சக்தி, த/பெ. சுந்தரம், 19, நீலமேகம் சந்து, திருமங்கலம்.	திருமங்கலம் நகர்ப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருமங்கலம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க விருதுநகர் சாலையில் மேலக்கோட்டை ஊராட்சிப் பகுதியில் அமைக்க இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 87, நாள்: 26-05-2004-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களின் கூட்டுப்புலத்தணிக்கையின் போது புதிய பேருந்து நிலையம் அமைக்க வேறு இடம் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

பார்வை 1ல் கண்டுள்ள மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 31-12-2009ம் தேதிய கூட்டுப்புலத்தணிக்கையின் போது திருமங்கலம் நகரம், வார்டு-பி, பிளாக்-6ல் உள்ள அரசு புறம்போக்கு நிலம் 8.99 ஏக்கர் மற்றும் தனியார் நிலம் 2.63 ஏக்கர் நிலங்களை தேர்வு செய்து தகுந்த ஆவணங்களுடன் நில ஆர்ஜிதப் பிரேரணைகள் தயார் செய்து மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களுக்கு சமர்ப்பிக்க கோரியுள்ளார்.

திருமங்கலம் நகரம், வார்டு-பி, பிளாக்-6.

(1) அரசு புறம்போக்கு நிலம்

வ. எண்ண	நகர புல எண்கள்	நிலத்தின் தன்மை	பரப்பு	குறிப்பு
1.	7/4	ச.புற	0.4050.0	களம்
2.	19/Part	ச.புற	1.0550.0	வண்டிப்பாதை
3.	21/2	ச.புற	0.5950.0	வண்டிப்பாதை+களம்+ மாலைக்கோயில்.
4.	20/2	ச.புற	0.2400.0	வண்டிப்பாதை
5.	20/3	ர.பு	0.7700.0	வேங்கடசமுத்திரம் கிராம பொது இடம்.
6.	22/3	ர.பு	0.5750.0	வேங்கடசமுத்திரம் கிராம பொது இடம்.
	மொத்தம்	3.6400.0 ஹெக்டேர் (அ) 8.99 ஏக்கர்.		

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(2)வார்டு, பிளாக்–6 தனியார் நிலங்கள்

வ. எண்	நகர புல எண்	நிலத்தின் தன்மை	பரப்பு	விபரம்	குறிப்பு
1.	3/7	ர.ந.	0.2750.0	அ.க.சு.பெ. நடராஜ் மகன் நாகராஜ் (விவசாயம்)	விவசாயம்
2.	21/11	ர.ந.	0.1000.0	பூலோகங்காத்த நாடார் மக்கள் (1) குருசாமி (2) நடராசன் வைத்தீஸ்வரன் (விவசாயம்)	விவசாயம்
3.	22/1	ர.ந.	0.2650.0	நாராயணன் ஆசாரி மகன் ராஜாமணி மாயன் மனைவி ஜோதி (1) பூமாலை சுந்தரத்தேவர் மகன் வடமலைராஜன் (2) விவசாயம்.	விவசாயம் (கப்பலூர் காலனி இருப்பு)
4.	22/2	ர.ந.	0.2650.0	பெருமாள்பிள்ளை மனைவி ராஜகந்தரி (விவசாயம்)	விவசாயம்
5.	20/1	ர.ந.	1.1600.0	அய்யன் ஆசாரி மனைவி குருவம்மாள்.	விவசாயம்
	மொத்தம்		1.0650.0	(2.63 ஏக்கர்)	

மேற்கண்ட நிலங்களில் பேருந்து நிலையம் அமைக்கும் பொருட்டு உத்தேசங்கள் சமர்ப்பிக்க வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது.

1. அரசு புறம்போக்கு நிலங்கள் – 8.99 ஏக்கர்
2. தனியார் பட்டா நிலங்கள் – 2.63 ஏக்கர்

மொத்தம் – 11.62 ஏக்கர்

மேற்கண்ட இடத்தில் திருமங்கலம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க பார்வை 3ல் கண்டுள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 207 நாள்: 29–01–2010ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த புதிய பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை அவர்களின் ஆய்வுக்குறிப்பின்படி தனியார் நில உரிமையாளர்களிடம் பேசி சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை அரசு நிர்ணயம் செய்யும் தொகைக்கு வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து எழுத்து மூலம் எழுதிக் கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட அரசு மற்றும் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதற்கு வேண்டுதல் கடிதம் (Requisition letter) சமர்ப்பிக்க ஏதுவாக அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்க பார்வை 2ல் கண்டுள்ள நேர்முகக் கடிதத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட பேருந்து நிலையம் ரூ. 9.00 கோடி மதிப்பீட்டில் அமைத்திட இவ்வலுவலக கடிதம் ந.க. எண். 126/2010/இ1. நாள்: 20–05–2010ல் போக்குவரத்து புள்ளி விபரம் மற்றும் திட்ட அறிக்கை நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலம் 01–06–2010ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி கூடுதல் விபரங்கள் இவ்வலுவலக 126/2010/இ1 எண்ணிட்ட கடிதம் மூலம் 01–11–2011ம் தேதியன்று நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், மதுரை அவர்கள் வாயிலாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேலனுப்ப அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

[ஆணையாளர் திருமங்கலம் நகராட்சி அவர்களின் கடித எண். 126/2010/இ1 நாள் 3–1–2012.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	4074	திரு. ச. முத்துகுமார் 2, சீனிவாசா காலனி, தட்டானூர், தனக்கன்குளம், மதுரை.	ஸ்ரீனிவாச காலனி மாட்டுத்தாவணி பேருந்து நிலையம், பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதிய பேருந்து சேர்க்கையின்போது முன்னுரிமை அளித்து மேற்படி வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) அவர்களின் கடித எண். வது/அ4/1568/2011. நாள் 31–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	4076	திரு. கோ.திருச்செல்வம், ஏ.பி.மலையாண்டிபுரம், யா.கொடிக்குளம், விவசாயக்கல்லூரி (வழி), மதுரை வடக்கு.	மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அரும்பனூர் ஊராட்சி, ஏ.பி.மலையாண்டிபுரம் கிராமத்தில் பொது கூடுகாட்டிற்கு ஆற்றின் நடுவே சிறிய பாலம் மற்றும் சாலை அமைத்து தரக் கோருதல்.

		துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
		(5)	(6)
		ஆற்றின் நடுவே பாலம் கட்டுவதற்கு பொதுப்பணித் துறையிடம் தடையில்லாச் சான்று வழங்க கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சான்று வரப்பெற்றதும், பாலம் மற்றும் சாலைப்பணியினை ஊராட்சி பொது நிதியிலிருந்து அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) மதுரை கிழக்கு அவர்களின் கடித எண்.3478/2011/அ5 நாள்: 2–1–2012.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	4079	டி.சேது, மாவட்ட செயலாளர், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி, நீரினை பயன்படுத்துவோர் சங்கம், காமராஜர் பாலம் அருகில், சோழவந்தான், வாடிப்பட்டி.	மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்தில் உள்ள தென்கரை கண்மாயினை தூர்வாரி கரைகளைப் பலப்படுத்த கோருதல்.

		துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
		(5)	(6)
		மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திலுள்ள தென்கரை கண்மாய் மூலம் சுமார் 581.34 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதியடைகின்றது. தென்கரை கண்மாய் கரைகளைப் பலப்படுத்தி, மடைகள் மற்றும் கலிங்குகளைச் சீரமைத்து, நீர்வரத்துக் கால்வாயைத் தூர்வார சுமார் 206.36 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரித்து பாரம்பரிய நீர்நிலைகளைப் பராமரிக்கும் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் சேர்ப்பதற்கு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு(பொ.ப.து.) குண்டாறு வடிநிலைக் கோட்டம், மதுரை–2 அவர்களின் கடித எண்.வ3/03/கோ.40/2011 நாள்: 30–12–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	4085	திருப்பாலை அன்புநகர் குடியிருப்போர் நலச்சங்கம், 1/289, அன்புநகர், திருப்பாலை, மதுரை.	மதுரை திருப்பாலை அன்புநகரில் குடியிருக்கும் மக்களின் பல்வேறு குறைகள் நிவர்த்தி செய்யுமாறு கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

வார்டு எண்.24ல் உள்ள திருப்பாலை அன்பு நகர் பகுதியில் சாலை வசதி மற்றும் பாதாள சாக்கடை அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.

[நகரப் பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண்.ம.பொ.4/ 00252/11 நாள்: 4–1–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	4086	திரு. க. குமார், 4/11, மேலத்தெரு, மேலூர்.	நூலகம் இடம் மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் மேலூர் கிளை நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது தொடர்பாக மேலூர் சிவன்கோயில் அருகே உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை கிளை நூலகம் அமைக்க திரு. சாமி, எம்.எல்.ஏ., அவர்கள் தேர்வு செய்து வழங்கியுள்ளார்கள். மேற்படி இடத்தில் நூலகம் கட்டுவதற்கு துறை சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[மாவட்ட நூலக அலுவலர், (பொ.) மதுரை அவர்களின் கடித எண். 560/அ/2011, நாள் 3.1.2012,]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	4094	பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், புதுவிளாங்குடி, மதுரை.	செவ்வாய்கிழமை சந்தையின் காரணமாக புதுவிளாங்குடிக்கு வரக்கூடிய நகரப் பேருந்துகளை நிறுத்தம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்படி கோரிக்கையினை கருத்தில் கொண்டு செவ்வாய்க்கிழமை அன்று புதுவிளாங்குடிக்கு செல்லக்கூடிய நகரப் பேருந்துகளை பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை அவர்களின் கடித எண்.வது/அ4/1570/2011. நாள்: 31–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	4096 மற்றும் 4108	திரு. ஜி.ஆர்.ரவிச்சந்திரன், 4/361, சீனிவாசா காலனி, தெற்கு தட்டானூர், மதுரை, திரு. பி.விஜயராமன், 4/325, தட்டானூர், (முத்தமிழ் நகர்) தனக்கன் குளம் அஞ்சல், மதுரை.	திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், கீழ்க்குயில்குடி ஊராட்சி, தட்டானூர், உட்கடை கிராமத்திற்கு குடிநீர் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தட்டானூர் கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 60000 லிட்டர் தண்ணீரும் ஊராட்சியின் மூலம் அமைக்கப்பட்ட போர் மூலமும் 3 சின்டெக்ஸ் டேங்குகள் மூலமும் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கோரியுள்ள பகுதியில் குடியிருப்புகள் தற்போதுதான் உருவாகி வருவதாலும் மற்றும் இப்பகுதி மேட்டுப்பகுதியாக இருப்பதாலும், புதியதாக போர் அமைத்து குடிதண்ணீர் வழங்கவேண்டியுள்ளது எனவும் தற்போது ஊராட்சியில் போதுமான நிதிவசதி இன்மையால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ்/ பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் அல்லது ஊராட்சி ஒன்றிய பொதுநிதியின் கீழ் வரப்பெற்றால் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட முடியும் என சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் அவர்களின் கடித எண்.தி1/031/2012 நாள்: 4–1–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

திட்டப்பணிகளுக்கான நிதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளியும் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	4099	திரு. கே.கருப்பையா, ஆதி திராவிடர் பொதுமக்கள் காலனி, தொட்டப்பநாயக்கனூர் கிராமம், உசிலம்பட்டி.	தொட்டப்பநாயக்கனூர் ஆதிதிராவிடர் காலனியில் சேடப்பட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் புதிதாக நல்ல தண்ணீர் இணைப்பு வழங்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி உட்கடையில் 175 பொதுமக்கள் வசிக்கின்றார்கள். இவர்களுக்கு தனியாக 5000 லிட்டர் கொள்ளளவில் சின்டெக்ஸ் ஒன்று உள்ளது. இதில் 5 பொதுகுழாய்கள் உள்ளன. அடிகுழாய்கள் இரண்டு உள்ளன. தற்பாது குடிநீர் பற்றாக்குறை இல்லை இருப்பினும் சேடப்பட்டி கூட்டுகுடிநீர் திட்டத்தில் புதியதாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்க கோரியுள்ளார்கள். இதுதொடர்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கலந்தாய்வு செய்து குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண்.1060/2011/தி1/ நாள்: 3–1–2012.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	4101	திரு. சி. அக்கினி, வட்டாட்சியர் (ஒய்வு) திருவள்ளுவர் நகர், பழங்காநத்தம், மதுரை.	நூலகம் மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு, முத்துராமலிங்கபுரம் ஊர்ப்புற நூலகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்டித் தர கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் முத்துராமலிங்கபுரம் ஊர்ப்புற நூலகத்திற்கு நிரந்தரமான, வசதியான கட்டிடம் கட்டுவது தொடர்பாக தீர்மான எண்.970–ல் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை வழங்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் நூலகம் கட்டுவதற்கு துறை சம்பந்தமாக நிர்வாக அனுமதி பெறப்பட்டதும் நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[மாவட்ட நூலக அலுவலர், மதுரை அவர்களின் கடித எண்.560/அ/2011 நாள்: 3–1–2012.]

குழுவின் குறிப்புரை

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	4102	எஸ். மோகன், 20, மேலத்தெரு, அனுப்பானடி, மதுரை–625 009.	மதுரை மாவட்டம் அனுப்பானடி ரோடு, சின்னக்கண்மாயில் ஆக்கிரமிப்பு அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மதுரை மாநகராட்சி, அனுப்பானடி ரோடு சின்னக் கண்மாய் ஆக்கிரமிப்பு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. [நகரப் பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண்.ம.பொ.4/000252/11 நாள்: 4–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	4103	ரெ.யோகேஸ்வரன், தலைவர், நேயா நற்பணிமன்றம், நடுத்தெரு, அனுப்பானடி, மதுரை.	அனுப்பானடியில் அமைந்துள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் கூடுதல் பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதிய பேருந்து சேர்க்கையின் போது முன்னுரிமை அளித்து மேற்படி வழித்தடத்தில் கூடுதல் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும். [பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை அவர்களின் கடித எண்.வது/அ4/1572/2011. நாள்: 31–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	4105	கிராம பொதுமக்கள், சக்கிலியங்குளம், மருதங்குளம், (மதுரை மாநகராட்சி 25 மற்றும் 27 வது வார்டு) தல்லாகுளம் வருவாய் கிராமம், மதுரை வடக்கு வட்டம்.	சக்கிலியங்குளம் மற்றும் மருதங்குளம் கிராமங்களின் பொது மயானத்திற்கு மின்சார விளக்கு மற்றும் காம்பவுண்டு சுவர் அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வார்டு எண்.25ல் உள்ள சக்கிலியங்குளம் மற்றும் மருதங்குளம் பகுதியில் உள்ள மயானத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் மின் விளக்கு அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. [நகரப் பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண்.ம.பொ.4/ 000252/11 நாள்: 4–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
22	4106	ஆர்.பால்துரை, த/பெ.(லேட்) ராசுத்தேவர், எம்.ஐ.ஜி2/1, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, தோப்பூர், மதுரை.	பழுதடைந்துள்ள பாதாளச் சாக்கடைகள் சீரமைத்தல் மற்றும் கழிவுநீர் சுத்தகரிப்பு மையம் மற்றும் இயந்திரங்களை பழுது நீக்கி சீர்செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்ற ஊராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் நிதி அரசிடமிருந்து வரப்பெற்றவுடன் பழுதுகள் நீக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண்.031/2012/தி1 நாள்: 4–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	4109	பா. சுந்தர் த/பெ. பால்துரை, எம்.ஐ.ஜி 2/1, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, தோப்பூர், மதுரை.	தோப்பூர் கிராமப் பொது மயானம்–ஆக்கிரமிப்புகள் அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுதாரர் கேட்டுள்ளபடி கிராம பொது மயானம் ஆக்கிரமிப்புகள் 04–01–2012 அன்று அகற்றப்பட்டது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண்.031/2012/தி1 நாள்: 4–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
24	4110	எஸ். கவிதாமணி, க/பெ.சுந்தர், எம்.ஐ.ஜி 2/1, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, தோப்பூர், மதுரை.	தோப்பூர் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு வழியாக நகரப்பேருந்து செல்லும் சாலை–பழுதடைந்துள்ளதை சரி செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்ற ஊராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் உரிய மதிப்பீட்டினை தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நிதி உதவி பெற்று உரிய நடவடிக்கை தொடர்வதாக ஊராட்சி மன்றத் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண்.031/2012/தி1, நாள்: 4–1–2012.]	ஊராட்சி நிதி அல்லது பொது நிதி போன்றவற்றிலிருந்து பணிசெய்து முடிப்பதாக தெரிவித்ததன் பேரில் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	4112	ஆர்.பாண்டிசெல்வி, க/பெ.ராஜா, மூணாண்டிபட்டி கிராமம், 2வது வார்டு உறுப்பினர், தோப்பூர் ஊராட்சி, திருப்பரங்குன்றம், மதுரை.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு–தோப்பூர் திட்டம்–திருமங்கலம் நேரடியாக சென்று வர போக்குவரத்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தற்போது பெரியார் நிலையத்திலிருந்து 22 தனி நடைகள் ஆஸ்டின்பட்டிக்கு இயக்கப்பட்டு வருகிறது. புதிய பேருந்து சேர்க்கையின் போது திருமங்கலத்திலிருந்து ஆஸ்டின்பட்டிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை அவர்களின் கடித எண்.வது/அ4/1572/2011. நாள்: 31–12–2011.

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	4113	ஆர். அய்யாத்துரை, 2/1034–1, சாமந்திபு வீதி, எழில்நகர், அய்யர் பங்களா, மதுரை	எழில்நகர் குடியிருப்பு பகுதியில் குடிநீர் வசதி, சாலை சீரமைப்பு போன்ற அடிப்படை வசதிகள் கோருதல்.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.	குழுவின் குறிப்புரை	துறையின் பதிலுரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
27	4116	க. திருமலையழகு, 7–1–37, பாரதிநகர் மேற்குத்தெரு, கிருஷ்ணாபுரம் காலனி (விரிவு), மதுரை	மண்டலம் 1 பகுதிகளில் நிழற்குடைகள் உள்ள 3 நகரப் பேருந்து நிறுத்தங்களில் இருக்கை வசதி செய்து கொடுக்க கோருதல்	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.	வார்டு எண். 25ல் உள்ள எழில்நகர் பகுதிகளில் சாலை வசதிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து நடவடிக்கையில் உள்ளது. குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து, அரசிடம் ஒப்புதல் பெற்ற பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [நகரப்பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண். ம.பொ. 4/000252/2011 நாள் 04–01–2012]

40

				குழுவின் குறிப்புரை.	துறையின் பதிலுரை
				(5)	(6)
	4116		மண்டலம் 1 பகுதிகளில் நிழற்குடைகள் உள்ள 3 நகரப் பேருந்து நிறுத்தங்களில் இருக்கை வசதி செய்து கொடுக்க கோருதல்	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.	மதுரை மாநகராட்சியில் தனியார் பங்களிப்பு மூலம் 220 இடங்களில் நகரப் பேருந்து நிறுத்தம் நவீன பயணிகள் நிழற்குடை (இருக்கை வசதியுடன்) அமைப்பதற்கு உத்தரவு வழங்கப்பட்டு 50% நிழற்குடை அமைக்கும்பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் உபயோகத்தில் உள்ளது. மீதமுள்ள நிழற்குடை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மனுவில் குறிப்பிட்டுள்ள V.P. ரத்தனசாமி நாடார் சாலையில் இருக்கை வசதியுடன் நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு இடங்களில் இருக்கை வசதியுடன் நவீன நிழற்குடை அமைக்கப்படும். [நகரப்பொறியாளர், மதுரை மாநகராட்சி அவர்களின் கடித எண். வது/அ4/1574/2011 நாள் 31–12–2011]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28	4213	பி. தருமர், பொதுமக்கள் சார்பில் திலீபன் குறுக்குத்தெரு மற்றும் முனியாண்டி கோவில் குறுக்குத் தெரு, பாண்டியராஜபுரம், பெத்தானியாபுரம் மதுரை.	பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கால்வாயில் ஆக்கிரமிப்பு அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(5)
மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மதுரை தெற்கு வட்டாட்சியர் கீழ்க்காணும் இத்துறை கடிதங்களின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். 1. செயற்பொறியாளர், பொபது.நீ.ஆ.அ.பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை அவர்களது கடித எண். வப/வ3/கோ30(ஆ)/7 ஆர்/2008, நாள் 10.1.2008. 2. உதவி செயற்பொறியாளர், பொபது. நி.ஆ.அ. பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் எண். 2 மதுரை அவர்களது கடித எண். கோ.26/2009/ உசெபொ2. நாள்: 11–11–09 மற்றும் கோ.37/2011–523, நாள்: 18–11–2011 அத்துடன் தொடர்ந்து உதவிப்பொறியாளர், வைகைப்பிரிவு வட்டாட்சியரை நேரில் தொடர்பு கொண்டும் ஆக்கிரமிப்பு விபரங்களை அறிவிக்க கேட்டுக் கொணடுள்ளார். [செயற்பொறியாளர், பொபது.நீ.ஆ.அ. பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை அவர்களின் கடித எண் வ3/03/கோ.40/2011 நாள் 4–1–2012.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பை தாசில்தார் நேரடியாக பார்வையிட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளதை தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
29	4214	கிராம பொதுமக்கள், பரவை கிராமம், பரவை பிட் 1, மதுரை.	பரவை பொதுப்பணித்துறை ஊற்று வாய்க்கால் அகலப்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஊற்று வாய்க்காலிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஊற்று வாய்க்காலை தூர்வார வரும் மழைக்காலத்திற்குள் தூரித நடவடிக்கை எடுக்கப்படும். [நீர்வள ஆதார அமைப்பு (பொ.ப.து) பெரியாறு வைகை வடிநிலக் கோட்டம், மதுரை–2, அவர்களின் கடித எண். வ3/03/கோ.40/2011 நாள் 4–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30	4216	திரு. எம். இராஜேந்திரன், பொதுமக்கள் சார்பாக, வேல்நாச்சியார் தெரு, மீனாம்பாள்புரம், மதுரை	மதுரை வடக்கு வட்டத்தில் உள்ள செல்லூர் வாய்க்கால் மற்றும் பீ.பீ.குளம் வாய்க்கால் சீர் செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டத்தில் செல்லூர் கண்மாய்க்கு கரிசல்குளம் கண்மாய், விளாங்குடி கண்மாய், ஆனையூர், சிலையனேரி, முடக்காத்தான், சம்பந்தர் ஆலங்குளம் கண்மாய்களின் உபரிநீர் வந்து சேர்கின்றது. இக்கண்மாயின் பாசனவசதி பெறும் நிலங்கள் அனைத்தும் குடியிருப்பு பகுதிகளாகியுள்ளது. அருகாமையிலுள்ள குடியிருப்பு பகுதிகளிலிருந்து கழிவுநீரும் குப்பைகளும் இக்கண்மாயில் கொட்டப்படுகின்றது. இக்கண்மாய்க்கு மழைகாலங்களில் அதிக அளவு வெள்ளநீர் வந்தடைகின்றது. செல்லூர் கண்மாயின் அதிகபடியான வெள்ளநீர் பந்தல்குடி கால்வாய் வழியாக வைகை நதியை வந்தடைகின்றது. இக் கால்வாயின் கரைகளின் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் குப்பைகளும் கழிவுநீரும் இக்கால்வாயில் விடப்பட்டு சுகாதாரக் கேடான சூழ்நிலை உள்ளது. பந்தல்குடி கால்வாய் கழிவுநீர் செல்லும் கால்வாயாக உள்ளது. இக்கால்வாயை ஆக்கிரமித்து வீடுகள் கட்டியுள்ளவர்களுக்கு தாக்கீதுகள் அனுப்பப்பட்டுள்ளது. கழிவுநீரை குழாய்களின் மூலம் அகற்ற மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

மேலும் சம்பந்தர் ஆலங்குளம் கண்மாயிலிருந்து வரும் வெள்ளநீரின் ஒரு பகுதி மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு பீ.பீ. குளம் கண்மாய் வழியாக வண்டியூர் கண்மாய் சென்றடையும். பீ.பீ. குளம் கண்மாய் மற்றும் வாய்க்கால்கள் முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. பீ.பீ. குளம் கண்மாய் மற்றும் கால்வாய்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள கால்வாய்கள் அனைத்தும் தற்சமயம் கழிவுநீர் கால்வாயாகச் செயல்பட்டு வருகின்றது. எனவே இக்கால்வாயிலுள்ள குப்பைகள் மற்றும் கழிவுநீரை அகற்றிச் சுத்தம் செய்திட மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் ஆவன செய்ய கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

[செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு(பொ.ப.து), குண்டாறு வடிநிலக் கோட்டம், மதுரை-2. அவர்களின் கடித எண். வ3/03/கோ.40/2011 நாள் 4-1-2012.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
31	4220	திரு. பி. கலையரசு, கிராம நல கமிட்டி உறுப்பினர், குறவன்குளம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி.	அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட குறவன்குளத்தில் சுகாதார வளாகம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி நிதி வசதி இல்லாத பேரூராட்சியாகும். பொதுநிதியிலிருந்து பணிகள் செய்ய நிதி வசதி இல்லாததால் பகுதி 2 திட்டத்தின் கீழ் 2012–2013ம் ஆண்டுக்கு சுகாதார வளாகம் கட்டுவதற்கு குறவன்குளம் பெருமாள்பட்டியில் பணி தேர்வு செய்து அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வேண்டி உரிய கருத்துரு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதியும் மற்றும் நிதியும் வழங்கப்பட்ட உடன் மேற்படி பகுதியில் சுகாதார வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

[செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 84/2011 நாள் 30–12–2011.]

குழுவின் குறிப்புரை

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
32	4221	திரு. பி. கலையரசு, கிராம நல கமிட்டி உறுப்பினர், குறவன்குளம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி.	எங்களது பகுதியில் அடிப்படை வசதியுடன் கூடிய கிராம சமுதாய கூடம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குறவன்குளம் கிராமத்தில் 2007–2008 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மனுதாரரின் கோரிக்கையின்படி மேற்படி சமுதாய கூடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் 2012–13ம் ஆண்டு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் உரிய நிதி பெற்று மேற்படி பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. [செயல், அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 84/2011 நாள் 30–12–2011.]	பேரூராட்சி பொதுநிதியிலிருந்து வரும் ஜூன் திங்களுக்குள் அடிப்படை வசதிகளை செய்து தருவதாக உதவி இயக்குநர், பேரூராட்சிகள் உறுதியளித்ததையடுத்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
33	4224	பி. கலையரசு, கிராம நல கமிட்டி உறுப்பினர், குறவன்குளம், அலங்காநல்லூர், வாடிப்பட்டி.	அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட குறவன்குளத்தில் ஆதிதிராவிடர் மயானத்தில் குடிநீர், குளியல் வசதிக்காக மின்மோட்டார் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குறவன்குளம் கிராமம் ஆதிதிராவிடர் மயானத்தில் பேரூராட்சி மூலம் ஒரு கை பம்ப் உள்ளது. இந்த கைபம்ப் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ரிப்பேர் ஏற்படும் சமயங்களில் உடனுக்குடன் சரி செய்யப்படுகிறது. மேலும் வைகை பெரிய கால்வாய் இம்மயானத்திற்கு அருகில் 10 மீட்டர் தூரத்தில் தான் உள்ளது. மேலும் பேரூராட்சியில் நிதி வசதி இல்லாததால் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அரசு நிதி கிடைத்தவுடன் மயான மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். [செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 84/2011 நாள் 30–12–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
34	4317	திருமதி. வெ. விமலா, க/பெ. சா. வெங்கடேசன், 129, கிழக்குத்தெரு, துவரிமான், மதுரை–10.	இலவச ஆண்கள் பொதுக் கழிப்பறை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பார்வையில் கண்ட மனுவில் கேட்டுள்ளவாறு ஆண்கள் சுகாதார வளாகம் கட்டுவது தொடர்பாக துவரிமான் ஊராட்சி மன்றத் தலைவரிடம் நேரில் சென்று பேசப்பட்டதில் ஆண்கள் சுகாதார வளாகம் கட்டுவதற்கு தகுந்த இடவசதி இல்லையென தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி மனுவில் கேட்டுள்ளவாறு ஆண்கள் சுகாதார வளாகம் கட்ட இயலாத நிலையில் உள்ளது. மேலும், ஆண்கள் சுகாதார வளாகத் திட்டம் ஏதும் தற்போது செயல்பாட்டில் இல்லை. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருப்பரங்குன்றம் நாள் 9–1–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
35	4319	திரு. சா. வெங்கடேசன், த/பெ. சாலைமுத்து, 129, கிழக்குத் தெரு, துவரிமான், மதுரை–10.	வேகத்தடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
வேகத்தடை அமைக்க மனுதாரரால் கோரப்பட்டுள்ள பகுதி மதுரை, மேலக்கால் சாலை (மாவட்ட முக்கிய சாலை) கி.மீ. 8/4 & 8/6–ல் அமைந்துள்ளது. மனுதாரரின் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அடுத்த கூட்டப்படும் சாலை பாதுகாப்புகுழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு சாலை பாதுகாப்புக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின் நிறைவேற்றப்படும். [கோட்டப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மதுரை அவர்களின் கடித எண். 66/2011/இ.வ.அ.2. நாள்: 09–01–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	4066	திருமதி. மு. ராமலட்சுமி, ஊராட்சி மன்றத் தலைவர், குமாரபுரம் ஊராட்சி மன்றம், பேரையூர் தாலுகா.	குடிநீர் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
குமாரபுரம் ஊராட்சியில் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் வினியோகம் செய்யப்படும் குடிநீர் சில நாட்கள் தடைபடும் போது குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதாகவும், இதனால், பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்களிடமிருந்து குடிநீர் வினியோகம் செய்திட முற்படும் பொழுது, அவைகளும் பழுதான நிலையில் இருப்பதாகவும், அதனால் குடிநீர் வழங்க இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின்மூலம் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் பழுதான மின்மோட்டார் மற்றும் அடிகுழாய்களை தற்பொழுது விடுவித்திட்ட மாநில நிதிக்குழு மான்யம் மற்றும் 13வது மான்யக்குழு மான்ய நிதியிலிருந்து பழுது நீக்கம் செய்துகொள்ளும்படி ஊராட்சி மன்றத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகம் தடையில்லாமல் நடைபெறுவதாக ஊராட்சி மன்றத் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)(பொ) ஊராட்சி ஒன்றியம், தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் அவர்களின் கடித எண். 1833/2011/அ3 நாள் 5–1–2012]	குடிநீர் விநியோகம் தடையின்றி நடைபெறுவதாக தெரிவித்ததன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	4067	திருமதி. மு. ராமலட்சுமி, ஊராட்சி மன்றத் தலைவர், குமாரபுரம் ஊராட்சி மன்றம், பேரையூர் தாலுகா.	மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் குமாரபுரம் கிராமத்தில் பழுதடைந்துள்ள மின்கம்பத்தை மாற்றி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் கோரிக்கையின்படி, மேற்படி குமாரபுரம் கிராமத்தில் மோசமான நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ள 12 மின்கம்பங்களும் ஆய்வு செய்யப்பட்டு அதில் மோசமான நிலையில் உள்ள 7 மின்கம்பங்கள் 5–1–2012 அன்று புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 5 மின்கம்பங்களை நல்ல நிலையில் உள்ளதால் மாற்றப்பட தேவை இல்லை. [மேற்பார்வை பொறியாளர் மமிபவ/மதுரை. அவர்களின் கடித எண். மேபொ/ மமிபவ/மது/முநிவ/அ.எண். 07 நாள் 5–1–2012.]	பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதால் நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	4069	திரு. பி. கே. குப்புசாமி, வீர சௌராஷ்டிர முன்னேற்ற சங்கம், 4/122, சீனிவாசாகாலனி, தட்டானூர், தனக்கன்குளம், மதுரை.	வீடுகளில் மின்சார விளக்குகள் எரியாமையை போக்க நடவடிக்கை எடுக்க கோருதல்.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	4081	திரு. எம். சிவக்குமார், த/பெ. முத்துகிருஷ்ணன், சி19/12, வைகை நகர், ஆரப்பாளையம், மதுரை.	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மதுரை வடக்கில் இருந்து சில வார்டுகளை பிரிக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

புகார் மனு மீதான நடவடிக்கையில் கீழக்குயில்குடி ஊராட்சி, தட்டானூர் கிராமம் சீனிவாசா காலனியில் உள்ள குறைந்த மின்னழுத்தம் 07-01-2012-க்குள் இருக்கின்ற ஒருமுனை பாதையை மும்முனை பாதையாக மாற்றி அமைத்து சரிசெய்யப்படும்.

[மேற்பார்வை பொறியாளர் மமிபவ/பெருநகர்/மதுரை அவர்களின் கடித எண். க.எ.செ.பொ/ப/மே/பெந/மது/கோ.புகார்/அ.எண். 5679/12. நாள் 2-1-2012.]

குழுவின் குறிப்புரை.

(6)

மின்னழுத்தம் சரிசெய்யப்பட்டுள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

துறையின் பதிலுரை.

(5)

மனு சமர்ப்பித்தள்ள மனுதாரர் தனிப்பட்ட முறையில் ஒரு மனுவினை சமர்ப்பித்து அதில் தாமதம் கண்டதாக குறிப்பிடப்படவில்லை. மேலும் அரசின் ஆணைப்படி எல்லைகள் வகுக்கப்பட்டு தற்போது நடைமுறையில் அலுவலக எல்லைகளின்படி பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, அலுவலகப்பணிகள் பொதுமக்களுக்கு சிரமமின்றி பணிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.

[வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மதுரை வடக்கு அவர்களின் கடித எண். 88/I31/2012 நாள் 2-1-2012.]

குழுவின் குறிப்புரை.

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	4318	திரு. சா. வெங்கடேசன், த/பெ. சாலைமுத்து, 129, கிழக்குத்தெரு, துவரிமான், மதுரை–10.	மதுரை மாவட்டம், துவரிமான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முழுநேர சுகாதாரப் பணிகளை மேற்கொள்வது குறித்து.

துறையின் பதிலுரை.

(5)

துவரிமான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் காலை மற்றும் மாலை நேர வெளிநோயாளி பிரிவுகளை ஒவ்வொரு நாளும் கவனித்து வருகின்றனர். செவிலியர்கள் நான்கு பேர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணிநேர சுகாதாரப் பணிகளை தடையின்றி மேற்கொள்ளப்படுவதற்காக சுழற்சி முறையில் பணிசெய்ய அறிவுறுத்தப்பட்டு அதன்படி நான்கு செவிலியர்களும் அவ்வாறு பணியை செவ்வனே செய்து வருகின்றனர்.

[துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் கடித எண். 106/அ7/2012, நாள் 9–1–2012.]

குழுவின் குறிப்புரை.

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS